தவறாமல் படியுங்கள்
போலீஸ் தகவல்
மாத இதழ்
தொடர்புக்கு: 7358005060, 8838207170
E-Mail: policethagavalnews@gmail.com

தின பார்வை
நடுநிலை நாளிதழ்
DINAPARVAI TAMIL DAILY
நிறுவனர்/ஆசிரியர்: எம். சிட்டிபாபு எம்.ஏ.,

தவறாமல் படியுங்கள்
மக்கள் பார்வை
இருவார இதழ்
தொடர்புக்கு: 7358005060, 8838207170
E-Mail: makkalparvainews2007@gmail.com

சென்னை மலர் -15 இதழ் 101 மே 15 புதன்கிழமை dinaparvaireporter@gmail.com 4 பக்கங்கள் விலை ரூ.3

# சவுக்கு சங்கர் மட்டும் அல்லாது எவர் மீதும் காவல் சித்திரவதை நிகழ்த்துவதை ஏற்றுக்கொள்ள முடியாது– காவல் சித்திரவதைக்கு எதிரான கூட்டியக்கம்



மதுரை: கோவை சிறைக்காவலில் யூ—டியூபர் சவுக்கு சங்கர் கண்கள் கட்டப்பட்டு, உடல் முழுவதும் துணிகளால் சுற்றப்பட்டு கடுமையாக சித்திரவதைக்கு உள்ளாக்கப் பட்டுள்ளார்; அவரது இடது கை உடைக்கப்பட்டுள்ளது. கோவை சிறைக் கண்காணிப்பாளர் செந்தில்குமார் முன்னிலையில் யூ—டியூபர் சவுக்கு சங்கரின் கை உடைப்பட்டதையும், அவர் சிறைக் காவலில் கொடூரமான சித்திரவதைகளுக்கு உட்படுத்தப்பட்டதையும் "காவல் சித்திரவதைக்கு எதிரான கூட்டியக்கம்" உறுதிப்படுத்திய பின்னரே இந்த செய்தியை வெளியிடுவதாக கூறினர்.

சட்ட ஆலோசகர் ஹென்றி டிபேன், ஒருங்கிணைப்பாளர் தியாகு மற்றும் செயலாளர் மீ.த.பாண்டியன் ஆகியோர் பத்திரிகையாளர் சந்திப்பில் கூறி—யிருந்ததாவது:—

தமிழ்நாடு காவல்துறையினர் தரப்பில் இருந்து இந்த சித்திரவதை குறித்து இதுவரை எந்த மறுப்பும் வெளி—யிடப்படவில்லை. அதேபோல் சவுக்கு சங்கரை நேர்காணல் செய்த ரெட் பிக்ஸ் எடிட்டர் பெலிக்ஸ் ஜெரால்டு இம்மாதம் 10 ஆம் தேதி டெல்லியில் சட்டப்புறம்பாக கைது செய்யப்பட்டு, மூன்று நாட்கள் சட்டப்புறம்பான காவலில் வைக்கப்பட்டு தமிழ்நாட்டிற்கு கொண்டு வந்து சிறையில் அடைக்கப்பட்ட போது முறையான சட்ட நடைமுறைகளை தமிழ்நாடு காவல்துறையினர் பின்பற்றவில்லை. இந்தச் சம்பவங்கள் குறித்து பல்வேறு முரண்பட்டக் கருத்துக்கள் சமூக ஊடகங்களிலும், பொதுவெளியிலும் வெளிவந்திருக்கின்றன; கடுமையான விவாதங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

தமிழ்நாடு காவல்துறையினர் யூ—டியூபர் சவுக்கு சங்கர் மீது நிகழ்த்தியிருக்கும் சித்திரவதைகளையும், ரெட் பிக்ஸ் எடிட்டர் பெலிக்ஸ் ஜெரால்டு சட்டப்புறம்பாக கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டிருப்பதையும் "காவல் சித்திரவதைக்கு எதிரான கூட்டியக்கம்" வன்மையாகக் கண்டிக்கிறது. சவுக்கு சங்கர் மீது பல்வேறு வழக்குகள் பதிவு செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார். அவர் மீது காவல்துறை தொடுத்துள்ள குற்றச்சாட்டுகள் உண்மையா அல்லது பொய்யா என்ற விவாதத்திற்குள் எமது கூட்டியக்கம் செல்லவில்லை. அது தொடர்பாக முறையான விசாரணை நடந்து நீதிமன்றம் சரியான தீர்ப்பினை வழங்கட்டும். ஆனால், கூட்டியக்கத்தின் உறுதியான நிலைப்பாடு "எக்காரணத்தை முன்னிட்டும், எச்சூழலிலும், எவர் மீதும் காவல் சித்திரவதை நிகழ்த்துவதை ஏற்றுக்கொள்ள முடியாது". அதேபோல் ஒரு நபர் கைது செய்யப்படும்போது காவல்துறையினர் கடைப்பிடிக்க வேண்டிய சட்ட நடைமுறைகள் முறையாக பின்பற்றப்பட வேண்டும். ஏற்கெனவே இது குறித்த சட்ட விதிமுறைகளும், உச்சநீதிமன்ற தீர்ப்புகளும் உள்ளன. குறிப்பாக, கைது குறித்த குற்ற விசாரணை நடைமுறைச் சட்டப் பிரிவு (41டி), டி.கே.பாசு எதிர் மேற்குவங்க அரசு வழக்கில் உச்சநீதிமன்றம் வழங்கிய கட்டளைகள், 2022 ஆம் ஆண்டு ஜுன் மாதம் முன்னாள் காவல்துறை இயக்குநர் சைலேந்திரபாபு அவர்கள் பிறப்பித்த நிரந்தர செயல்முறைகள் ஆகியவை முக்கியத்துவம் வாய்ந்தவை; கட்டாயம் கடைபிடிக்கப்பட வேண்டியவை.

கடந்த காலங்களில் யூ—டியூபர் சவுக்கு சங்கர் காவல்துறையிலும், ஊடகத்துறையிலும் பணியாற்றும் பெண்கள் குறித்து மிகவும் கேவலமாகவும், கீழ்த்தரமாகவும் அருவருக்கத்தக்க வகையிலும் கருத்துக்களை தெரிவித்துள்ளார். இது மோசமான மனித உரிமை மீறலே. அவருடைய இதுபோன்ற கருத்துக்களை நாம் வன்மையாக கண்டிக்கிறோம். தமிழ்நாட்டில் நடைபெற்ற எழுச்—சிமிக்க போராட்டங்களை முன்னெடுத்த பல்வேறு மனித உரிமைப் போராளிகளை இவர் மிகவும் கொச்சைபடுத்தி, கேவலமாக சித்தரித்து சிறுமைப்படுத்திய வரலாறுகளும் உண்டு. இப்போராட்டங்களை ஒடுக்குவதற்காக காவல்துறை நடத்திய சித்திரவதைக் கொடுமைகளை இவர் பல வேளைகளில் நியாயப்படுத்தி, சித்திரவதையை நடத்திய காவல்துறையினருக்கு சார்பாகவே நின்ற வரலாறுகளும் உண்டு. பல நேர்வுகளில் பாதிக்கப்பட்டோருக்கு எதிர்நிலைப்பாட்டை எடுத்தவர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது. சான்றாக, பள்ளி மாணவி ஸ்ரீமதி சந்தேக மரணத்தில் அப்பள்ளித் தாளாளருக்கு ஆதரவாக எடுத்த அவரது ஒருதலைப்பட்சமான நிலைப்பாட்டை நாம் எளிதில் மறக்க முடியாது.

இவையெல்லாம் இருப்பினும் அவர் சிறைக் காவலில் சித்திரவதைக்கு உள்ளானதை எக்காரணத்தை முன்னிட்டும் இக்கூட்டியக்கம் ஏற்றுக்கொள்ளாது. எந்த வடிவில் சித்திரவதை நிறைவேற்றப்பட்டாலும் அது தடுக்கப்பட வேண்டியது; சித்திரவதை நிகழ்த்தும் காவல்துறை—யினரும், சிறைத்துறையினரும் சட்ட—ரீதியாக தண்டிக்கப்பட வேண்டும்.

இதேபோல் பெண் காவலர்களின் மாண்புக்கு இழுக்கும் நேரும் வகையில் நேர்காணலை நடத்தியதற்கும் அதனை பதிவேற்றம் செய்தமைக்காகவும் ரெட் பிக்ஸ் எடிட்டர் பெலிக்ஸ் ஜெரால்டு மீது வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது. தமிழகக் காவல்துறையினர் டெல்லியில் அவரைக் கைது செய்த போது முறையான "Transit Warrant" எதுவும் பெறவில்லை. எந்தபிடியாணையுமின்றி டெல்லியில் இருந்து அவர் கைது செய்யப்பட்டு தமிழகத்திற்கு கொண்டு வந்ததும் சட்டப்புறம்பாக சிறையில் அடைத்ததும் மோசமான உரிமை மீறல்களே; இந்திய அரசமைப்புச் சட்டப் பிரிவுகள் 20 மற்றும் 22 ஆகியவற்றிற்கு முரணானவையே. அவர் மீது பதியப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அனைத்தும் ஏழு ஆண்டுக்குள்ளான தண்டனை பெறத்தக்கவை. இது "அர்னேஷ்குமார் எதிர் பீகார் அரசு வழக்கில்" உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கு எதிரான ஒன்றாகும். (இவர் முறையான பிடியாணை எதுவுமின்றி சட்டப்புறம்பாக கைது செய்யப்பட்டது, டெல்லி விமான நிலையத்திற்கு அலைக்கழிக்கப்பட்டது, பின்னர் தொடர்வண்டியில் முன்பதிவு செய்யப்படாத பெட்டியில் சென்னைக்கு கொண்டு வரப்பட்டது போன்ற அனைத்து தகவல்களையும் காவல் சித்திரவதைக்கு எதிரான கூட்டியக்கம் அறிந்திருக்கிறது.) ரெட் பிக்ஸ் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற காவல்துறையினர் சோதனை என்ற பெயரில் விலையுயர்ந்த கேமராக்களையும் கணினிகளையும் காவல்துறை கைப்பற்றியுள்ளது. காவல் துறையினரின் இந்த நடவடிக்கையே ரெட் பிக்ஸ் ஊடகத்தை இயங்கவிடாமல் தடுக்கும் திட்டமாகும் என்று காவல் சித்திரவதைக்கு எதிரான கூட்டியக்கம் கருதுகிறது. எனவே, பெலிக்ஸ் ஜெரால்டு மீதான காவல்துறையின் இந்த சட்ட விரோத நடவடிக்கைகளை கண்டிக்கிறோம்.

இந்த காவல் சித்திரவதைக் கொடுமைகளை சென்னை உயர்நீதிமன்ற கோடை விடுமுறை முதல் அமர்வு உடனடியாக விசாரணைக்கு எடுத்துக் கொண்டு, இது குறித்த அறிக்கைகளை விரைந்து பெற்று சட்டரீதியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். சிறைத்துறை கண்காணிப்பாளர் செந்தில்குமார் பொறுப்பாக உள்ள சிறையில் சவுக்கு சங்கரை தொடர்ந்து வைத்திருப்பது ஐக்கிய நாடுகள் சபை நிறைவேற்றியுள்ள "மண்டேலா கோட்பாட்டிற்கு" (United Nations Standard Minimum Rules for the Treatment of Prisoners (the Nelson Mandela Rules 2015) எதிரானது. கோவை சிறையில் தனது உயிருக்கு ஆபத்து உள்ளது என்று யூ—டியூபர் சவுக்கு சங்கர் நீதிமன்றத்திற்கு அழைத்துச் செல்லப்படும் போது ஊடகங்களில் தெரிவித்துள்ளார். எனவே, அவரை உடனடியாக வேறு சிறைக்கு மாற்றம் செய்து, அவரது உயிருக்கு பாதுகாப்பு வழங்கிட வேண்டும் என்று இக்கூட்டியக்கம் கேட்டுக்கொள்கிறது.

பெலிக்ஸ் ஜெரால்டை சட்டப்புறம்பாக கைது செய்த காவல் ஆய்வாளர் வீரமணி மற்றும் பிற காவலர்கள் மீது உடனடியாக சட்டப்பூர்வ நடவடிக்கை எடுக்க வேண்டும். அவரை சிறைக்கு அனுப்பிய நீதித்துறை நடுவர் மீதும் சென்னை உயர்நீதிமன்றம் உடனடியாக துறைரீ—தியான ஒழுங்கு நடவடிக்கையை எடுக்க வேண்டும். குற்றம் சாட்டப்பட்டவரை கொடூரமாக சித்திரவதை செய்வதற்கும், மிகக் கேவலமாக நடத்துவதற்கும் காவல்துறையினருக்கு முழு உரிமம் வழங்கப்பட்டுள்ளது என்ற பொதுவான சிந்தனைப்போக்கு மக்களிடம் இருந்தும் மாற்றப்பட வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.